# மாற்று முகவர் நிகழ்ச்சித் திட்டத்தின் ஆரம்பமும் பரிணாமமும் தற்போதைய நிலைமையும்

**பீ.தர்மதாச பெர்னாண்டோ,**
**ஓய்வு பெற்ற பிரதிப் பணிப்பாளர், கிராம அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்.**

வறுமையை ஒழிப்பதை ஒரு அரச கொள்கையாக ஏற்றுக் கொண்டுள்ள இலங்கையானது 2017ஆம் ஆண்டினை வறுமையை முற்றுமுழுதாக ஒழிக்கும் ஒரு ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. இது இலங்கையானது தனது அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டதில் வறுமையை ஒழிக்கும் செயற்பாட்டிற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளமையை நன்கு தெளிவாக்குகின்றது.

இப்பின்னணியின் கீழ் மாற்று முகவர் நிகழ்ச்சித் திட்டம் மற்றும் அதன் மூலம் கட்டி எழுப்பப்பட்ட மாற்று முகவர் பங்கேற்றல் அபிவிருத்தி அணுகுமுறை தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டியது காலத்தின் தேவையாகும். அதற்கு காரணம், வறிய மக்களை மட்டும் இலக்காகக் கொண்டு வறுமையை ஒழிக்கும் நோக்கில் அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட முதலாவது பங்கேற்றல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமாக மாற்று முகவர் நிகழ்ச்சித் திட்டம் காணப்படுகின்றமை ஆகும்.

சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்பல் அமைச்சின் கீழ் செயற்படுகின்ற கிராமிய அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தினால், மக்களிடையே நியமிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்ற மாற்று முகவர் நிகழ்ச்சித்திட்டமானது உண்மையிலேயே வறுமையை ஒழிப்பதற்கான பங்கேற்றல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமாகும். விசேடமாக வறிய மக்களை அறிவுறுத்தும் செயற்பாடானது அவர்களை வலுப்படுத்துவதற்கான சமூக உயிரோட்டமிக்க ஒரு உபாய மார்க்கமாகும். நான்கு தசாப்த காலப்பகுதியில் அபிவிருத்தி கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் அபிவிருத்தி நிபுணர்களால் பல்வேறு அரச மற்றும் அரச சார்பற்ற அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு, மாற்று முகவர் நிகழ்ச்சித்திட்டத்தின் எண்ணக்கருக்கள் மற்றும் முறைமைகள் என்பன, அதில் காணப்படுகின்ற விசேட இயல்புகள் காரணமாகவே, அவற்றில் ஈடுபடுத்தப்பட்டன.

மாற்று முகவர் நிகழ்ச்சித் திட்டத்தின் ஆரம்பம், பரிணாமம், தற்போதைய நிலைமைகள் தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தும் வேளையில், கிராமிய அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தினால் 1978 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு, செயற்பாட்டு ரீதியான கிராமிய அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு விளைவாக கட்டி எழுப்பப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமானது, மாற்று முகவர் நிகழ்ச்சித் திட்டம் என்ற பெயரில் அழைக்கப்பட்டது.

இலங்கையில் காலணித்துவ பொருளாதாரத்தில் கட்டி எழுப்பப்பட்ட, சமனற்ற அபிவிருத்திச் சூழலில், தேசிய ஆளுங்கட்சியினர், தாம் பின்பற்றிய நிகழ்ச்சித்திட்டத்திலும் கூட வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய திட்டங்களை வகுக்கத் தவறினர். கிராமம் மற்றும் நகரங்களுக்கிடையிலான வருமான இடைவெளி அதிகரித்துக் கொண்டே சென்றது. வேலையில்லா திண்டாட்டம், இளைஞர்களிடையே ஏற்பட்ட வெறுப்பு போன்ற காரணங்களால் ஏற்பட்ட இளைஞர்களது கிளர்ச்சி காரணமாக புதிய அபிவிருத்தியை நோக்கிய திட்டங்களுக்கான தேவை 1970 ஆம் ஆண்டுகளில் எழத் தொடங்கியது.
மாற்று முகவர் நிகழ்ச்சித் திட்டத்தி னை அடிப்படையாகக் கொண்ட செயற்பாட்டு ரீதியான ஆராய்ச்சி செயன்முறைகளது தோற்றத்திற்கு, தாக்கம் செலுத்திய உள்நாட்டுக் காரணங்கள் அவ்வாறு இருந்தாலும் அக்காலத்தில் பூகோள ரீதியான அபிவிருத்தி நீரோட்டத்தில் ஏற்பட்ட புதிய

அபிவிருத்தி அணுகுமுறைகளையும் நாம் மறந்து விடக் கூடாது. 197 0இல் இலங்கை அரசு ஜெர்மனியின் கொன்ராட் அட்னோர் அமைப்புடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தமானது மாற்று முகவர் நிகழ்ச்சித்திட்டம், இந்நாட்டில் உருவாவதற்கு தாக்கம் செலுத்திய பிரதான காரணம் என பகுப்பாய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இவ்வொப்பந்தத்தின் விளைவாக முன்னெடுக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் சங்க உத்தியோகத்தர்களது பயிற்சித் திட்டமானது, 1977இல் பலராலும் பாராட்டப்பட்டது. எனினும் அப்பயிற்சியானது எதிர்பார்த்த இலக்கினை அடைந்து கொள்ளத் தவறியது. 1977இல் திரு. டீ.டீ.எஸ்.ரத்னவீர அவர்களால் முன்வைக்கப்பட்ட ‘கிராமிய அபிவிருத்தி மற்றும் பயிற்சியின் ஆரம்ப முயற்சி’ என்ற அறிக்கையில் பாரம்பரிய கிராமிய அபிவிருத்தியினதும் பயிற்சி அணுகுமுறையினதும் குறைபாடுகள் சுட்டிக் காட்டப்பட்டிருந்தன. அவ்வாறே 1974ஆம் ஆண்டில் ஆசிய பசுபிக் அபிவிருத்தி நிறுவனமானது கிராமிய அபிவிருத்தி தொடர்பாக செயற்பட்ட சில நிபுணர்களை ஒருங்கிணைத்து, தெற்காசியாவில் அக்காலத்தில் காணப்பட்ட கிராமிய அபிவிருத்தி அணுகுமுறைகள் தொடர்பாக கலந்துரையாடியது. அதன் போது எடுக்கப்பட்ட இறுதி அவதானிப்பானது தெற்காசியாவின் அபிவிருத்திக்கான புதிய கிராமிய அபிவிருத்தி அணுகுமுறைகளின் அவசியம் கண்டறியப்பட்டது. இந்நிபுணர் குழுவில் பேராசிரியர் மகிதூர் ஹக் , பேராசிரியர் அன்சூர் ரகுமான் (பங்களாதேஷ்) பேராசிரியர் நிரஞ்சன் மேத்தா (இந்தியா) பேராசிரியர் பொன் விக்னராஜா மற்றும் ஜீ.வீ.எஸ்.சில்வா (இலங்கை) ஆகிய அறிஞர்கள் கலந்து கொண்டனர். கிராமிய அபிவிருத்திக்காக புதிய அணுகுமுறைகளைச் தேடிச் செல்லும் பயணத்தில் தெற்காசிய சமூக ஆய்வாளர்களுக்குச் சமமாக டேக் ஹமார்சல் அமைப்பால் 1975ஆம் ஆண்டில் இன்னுமொரு அபிவிருத்தி தொடர்பான கருத்து முன்வைக்கப்பட்டது. அதன் மூலம் கிராமிய அபிவிருத்திக்காக புதிய அளவீடொன்றின் அவசியமும், புதிய அபிவிருத்தி அணுகுமுறையும், புதிய முறைமைகளும் தேவை என கருதப்பட்டது. அவ்வாறே 1978 ஆம் ஆண்டில் இந்தியாவிலும் பங்களாதேசிலும் பல்வேறு திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு அனுபவங்களைப் பெற்றிருந்த நிபுணர்கள் சிலர் இலங்கையின் கிராமிய அபிவிருத்தி செல்லும் புதிய திசை தொடர்பாக ஆர்வம் காட்டியமை மிகுந்த பயனுடையதாக அமைந்தது.

இப்பின்னணியின் கீழ் ஜெர்மனியின் கொன்ராட் அட்னோர் அமைப்பு மற்றும் ஐக்கிய நாடுகளின் அமைப்பு, கிராமிய அபிவிருத்தி ஆராய்ச்சி சபை, அரசாங்க நிருவாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு, இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் என்பவற்றுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களின் பயனாக கிராமிய அபிவிருத்தி தொடர்பான செயற்பாட்டு ரீதியான ஆராய்ச்சி முறையை தோற்றுவிப்பதற்குத் திட்டமிடப்பட்டது. அரசாங்க நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால், உரிய நிருவாக நடவடிக்கைகள் பொறுப்பேற்கப்பட்டதுடன் கொன்ராட் அட்னோர் அமைப்பு மற்றும் ஐக்கிய நாடுகள் சபையானது நிதி உதவியையும் வளவாளர் சேவையையும் வழங்கியது.

அதனடிப்படையில், இவ்வாராய்ச்சி நடவடிக்கைக்காக பொருத்தமான ஆராய்ச்சி குழுவை இனங்கண்டதுடன் அதில் பன்னிரண்டு பேர் அரச உதியோகத்தர்களாகக் காணப்பட்டனர். அதற்கு புறம்பாக ஒரு ஊடகவியலாளரும் தொண்டர் பணியாளர் ஒருவரும் அக்குழுவில் இடம்பெற்றனர். ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி நிறுவனத்தின் சர்வதேச ஆலோசகர்கள் ஆரம்ப பயிற்றறுவிப்பாளர் குழுவின் வளவாளர்களாக செயற்பட்டதுடன் பயிற்சி நடவடிக்கைகள் தொடர்பான புலனாய்வு மற்றும் மதிப்பீடு என்பன ஆராய்ச்சி சபையினால் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாராய்ச்சி சபையானது, அரசாங்க நிருவாக, தொழில், சுகாதார அமைச்சுக்களது செயலாளர்களுடன் இன்னும் சில நிபுணர்களைக் கொண்டதாகக் காணப்பட்டது. பேராசிரியர் நந்ததாச கோதாகொட, பேராசிரியர் கருணாசேன கொடிதுவக்கு, டாக்டர்.திலக் குணசிங்க, லால் விஜேபால என்போர் அதில் உள்ளடங்குவர்.

ஆரம்ப பயிற்சி குழுவின் பயிற்சி காலம் 15 மாதங்களாகும். அதற்காக இலங்கையின் நான்கு மாகாணங்களைச் சார்ந்த ஒன்றிற்கொன்று வேறுபட்ட பொருளாதார செயற்பாடுகளில் ஈடுபாடிருந்த 4 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டன.

அதனடிப்படையில்,

- வெலிகம – மிரிஸ்ஸ கிராமம்
- மினுவங்கொட – மெடிகொடமுள்ள கிராமம்
- அவிசாவளை - பின்னவல கிராமம்
- உடுநுவர – மாத்கமுவ கிராமம்

ஆகிய கிராமங்களில் இவர்கள் குழுவாக தங்கியிருந்தனர்.

இவ்வாராய்ச்சி குழுவானது அந்தந்த கிராமங்களில் மிகுந்த ஆர்வத்துடன் ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டு, கண்டறிந்த விடயங்களை மக்களுடன் கலந்துரையாடியும், விளக்கியும், அபிவிருத்திக்கு தடையாகவுள்ளவற்றை தகர்த்தெறிவதற்கு எடுக்கப்பட வேண்டிய வழிமுறைகளை மக்களிடமிருந்தே கண்டறியும் செயற்பாடுகளில் ஈடுபட்டனர். அவ்வாறே, மேல் நோக்கிய, கீழ் நோக்கிய, செங்குத்து தொடர்புகளில் உள்ள பாதகமான நிலைமைகளை விளங்கிக் கொண்ட இலக்கு குழு, மக்களுடன் கிடையான தொடர்புகளை ஏற்படுத்தி ஒருங்கிணைந்த முயற்சியின் அர்த்தம் மூலமாக கட்டி எழுப்பப்பட்ட ஒழுங்கமைப்பு ரீதியான அணுகுமுறையை பின்பற்றியது. இவ்வாராய்ச்சி ரீதியான செயற்பாடுகள் மூலம் இனங்காணப்பட்ட மாற்று முகவர் முறையின் விசேட அம்சம் யாதெனில் ஆய்வு, பகுப்பாய்வு மற்றும் யதார்த்தத்தை அறிந்து கொள்ளுதல் போன்ற அனைத்து விடயங்களையும் செயற்பாடாக மாற்றுவதாகும். ஒரு ஆராய்ச்சியாளர் அல்லது நடுநிலையாளர் ஆழமான புலனாய்வு நடைமுறையொன்றில் வரிசைப்படுத்தப்படுகின்ற இந்த கற்றல் நடவடிக்கையானது நபரது அறியும் திறன், அவரது அறிவை தட்டி எளுப்புதல் அல்லது மக்கள் சக்தியாக்குதல் என குறிப்பிடப்படுகின்றது. மாற்று முகவர் நிகழ்ச்சித்திட்டம் ஊடாக கவனம் செலுத்தப்படுகின்ற இத்தகைய புதைந்து போன சக்திகளை மீளக் கட்டி எளுப்பும் செயற்பாடானது 1990களின் தசாப்தங்களில் சமூக உயிரோட்டம் என அழைக்கப்பட்டது.

மாற்று முகவர் நிகழ்ச்சித் திட்டம் ஊடாக பகுப்பாய்வு செய்யப்படுகின்ற இந்த விரிவான கலந்துரையாடலானது சுய சக்தி மற்றும் பங்கேற்றலை அடிப்படையாகக் கொண்ட சமூக பொருளாதார மற்றும் கலாச்சார அபிவிருத்தியை நோக்கி தனிநபர்களையும் சமூகத்தினரையும் ஈடுபடுத்துகின்றது. சிறு குழுவிலிருந்து ஆரம்பிக்கின்ற இந்த ஒழுங்கமைப்பு கட்டமைப்பானது தீர்மானம் எடுக்கும், நடைமுறைப்படுத்தும், வழிநடத்தும், மதிப்பீடு செய்யும் செயற்பாட்டின் பொறிமுறையாக செயற்படுகின்றது. இத்தகைய சாதகமான அம்சங்கள் காரணமாக வறுமையை ஒழிப்பதை நோக்காகக் கொண்ட திட்டங்களிடையே மாற்று முகவர் திட்டம் முக்கியத்துவம் பெறுகின்றது.

**மாற்று முகவர் நிகழ்ச்சித் திட்டத்தின் பரிணாமம்–**

மாற்று முகவர் நிகழ்ச்சித் திட்டம் இற்றைக்கு 39 வருட காலமாக செயற்பட்டு வருகின்றது. இக்காலப்பகுதியுள் மாற்று முகவர் நிகழ்ச்சித்திட்டத்தின் பரிணாமம் தொடர்பாக சில ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இறுதியாக செய்யப்பட்ட ஆய்வானது, பேராசிரியர் டியுடர் சில்வா உள்ளிட்ட குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வாகும். இதற்கு முன்னர் மாற்று முகவர் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான அடிப்படை ஆய்வு குழுவின் ஆய்வாளரான திருமதி. மோனிகா ருவன்பதிரனவினாலும் பின்னர் அடிப்படை ஆய்வாளர் திரு.வில்ப்ரட் கருணாரத்னவினாலும் இவ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதாக அறிய முடிகின்றது.

இதற்கு முன்னர் விபரிக்கப்பட்ட விதத்தில் மாற்று முகவர் நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்பக் கட்டம் அதாவது 1978 – 1984 காலப்பகுதியானது ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட காலப் பகுதியாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். கிராமிய அபிவிருத்தி மற்றும் வறுமையை ஒழிப்பதற்கு முக்கியமான சாதகமான காரணிகள் பல இனங்காணப்பட்டாலும் நிகழ்ச்சித்திட்டத்தின் விரிவாக்கம் தொடர்பில் பல தடைகள் தோன்றின. அடிப்படை பயிற்றுவிப்பாளர்களுக்கு புறம்பாக பல்வேறு தடவைகளில் பயிற்றுவிப்பாளர்கள் நியமிக்கப்பட்டு பயிற்றுவிக்கப்பட்டாலும் அவர்கள் பல்வேறு தடவைகளில் விலகிச் சென்றமை மகிழ்ச்சிகரமான நிலைமையாகத் தென்படவில்லை. 157 பேர் பயிற்றுவிக்கப்பட்டிருந்தாலும் அவர்களுள் 86 பேர் மாத்திரமே எஞ்சியிருந்தனர். ஒரு கிராமத்தை மையமாகக் கொண்டு அதனைச் சுற்றி இன்னமும் 5 கிராமங்களை இலக்காகக் கொண்டு கிராம வளையமாக இக்காலப் பகுதியுள் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

மாற்று முகவர் நிகழ்ச்சித்திட்டத்தின் பரிணாமம் தொடர்பில் கலந்துரையாடும் போது கி.பி. 1985 தொடக்கம் 1989 காலப் பகுதி மிக முக்கியமாகும். கிராமிய அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் முகாமைத்துவம் மற்றும் அடிப்படை ஆராய்ச்சி குழுவின் சில பயிற்றுவிப்பாளர்களுக்கிடையே ஏற்பட்ட பிரச்சினையான நிலைமைகள் அதன் விரிவாக்கத்தில் சிறிது தாக்கத்தை ஏற்படுத்தின. மாற்று முகவர் முறையை மிக வலுவாக முன்னெடுத்துச் செல்வதற்காக முக்கிய பயிற்றுவிப்பாளர்கள் சிலரால் பீடா நிறுவனம் (பாரமி பங்கேற்றல் ஆய்வு நிறுவனம்) தாபிக்கப்பட்டதுடன் இன்னும் சில அடிப்படை பயிற்றுவிப்பாளர்களால் 1985 ஆம் ஆண்டு தோளங்கமுவ மனித வள நிலையம் தாபிக்கப்பட்டது. அவ்வாறே காலத்திற்கு காலம் ஆட்சேர்க்கப்பட்டு பயிற்றுவிக்கப்பட்ட பயிற்றுவிப்பாளர்களாக சேவையாற்றிய 57 கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் திணைக்களத்தினால் அகற்றப்பட்டமையானது இத்துறையின் செயற்பாடுகளை பின்னடையச் செய்தது. 1989ஆம் ஆண்டு காலப்பகுதியில் சமூகத்தில் ஏற்பட்ட நிலைமையும் இத்திட்டத்தின் விரிவாக்கத்தில் தாக்கம் செலுத்திய இன்னுமொரு காரணமாகும். எனினும், 1987ஆம் ஆண்டு வரை நாட்டிலுள்ள 13 மாவட்டங்களில் 73 வேலைத் தளங்களில் (கிராமிய வளையம்) இத்திட்டம் விரிவாக முன்னெடுக்கப்பட்டதாக அறிக்கைகள் குறிப்பிடப்படுகின்றன. அவ்வாறே ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி திட்டத்திற்கு மாற்று முகவர் திட்டத்தை, அதாவது சமூக உயிரோட்ட முறையை இணைக்கும் செயற்பாடுகளும் இக்காலப்பகுதியிலேயே ஆரம்பமானது. மாற்று முகவர் திட்டம் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்ட நிபுணர்கள் 1990 -1995 வரையான காலப்பகுதியை நிகழ்ச்சித்திட்டத்தின் அபிவிருத்திக் கட்டமெனக் குறிப்பிடுகின்றனர்.

1980 தசாப்தங்களின் நடுப்பகுதியில் கருத்திட்டதில் தாக்கம் செலுத்திய சாதகமான காரணிகள் மற்றும் பாதகமான காரணிகள் தொடர்பில் கவனம் செலுத்திய கிராமிய அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் முகாமைத்துவமானது பாதகமான காரணிகளை கட்டுப்படுத்துவதற்கும் சாதகமான காரணிகளை திட்டத்தின் வளர்ச்சிக்கு பயன்படுத்திக் கொள்வதற்கும் முயற்சித்தது. அவ்வாறே, அரசாங்கத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பங்களிப்புச் செய்யும் விதத்தில் நிறுவனத்தின் ஒழுங்கமைப்பு கட்டமைப்பையும் பொருத்தமடையச் செய்தது.

1991 ஆம் ஆண்டு ஜனவரி வரை 11 மாவட்டங்களிலும் 62 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் இந்த மாற்று முகவர் நிகழ்ச்சித் திட்டம் செயற்பாட்டில் இருந்தது. அதற்காக சீடா சர்வதேச நிறுவனமும், கெயார் சர்வதேச நிறுவனமும் நிதியுதவிகளை வழங்கியது. கம்பகா, களுத்துறை, காலி, மாத்தறை, கண்டி, நுவரெலியா, பதுளை, கேகாலை, மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களுக்கு சீடா நிறுவனமும், அனுராதபுரம், புத்தளம் மாவட்டங்களுக்கு கெயார் நிறுவனமும் நிதியுதவிகளை வழங்கியது.

1990களின் ஆரம்பத்தில் இதுவரை நடைமுறைப்படுத்திய திட்டம் மற்றும் பேணி வந்த விதங்களில் மாற்றங்களை ஏற்படுத்தி கிராமிய வளையம் என்ற முறைக்குப் பதிலாக துரித விரிவாக்கத்தை நோக்கமாகக் கொண்டு பிரதேச செயலக பிரிவுகளை அடிப்படையாகக் கொண்ட தொண்டர் சேவை திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் பிரதேச மட்டத்தில் இனங்காணப்பட்ட மாற்று முகவர்கள் மற்றும் தொண்டர் பணியாளர்களுக்கு கட்டம் கட்டமான பயிற்சிகளை வழங்கி ஒரே தடவையில் உரிய கிராமங்களில் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. இத்திட்டமானது 6 மாவட்டங்களில் 20 பிரதேச செயலகப் பிரிவுகளில் செயற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தை துரிதமாக விரிவாக்கம் செய்வதற்கு இந்நிறுவனம் தலையிட்டமைக்கான இன்னுமொரு காரணம் அரசாங்கத்தின் தேசிய நிகழ்ச்சித்திட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்ட ஜனசவிய நிகழ்ச்சித் திட்டத்தில் சமூக உயிரோட்ட முறையை பிரதான உபாயமாகப் பயன்படுத்துவதாகும். 1991 இல் ஆரம்பிக்கப்பட்ட ஜனசவிய நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் முறையாக, சமூக உயிரோட்டம் காணப்பட்டது. மாற்று முகவர் நிகழ்ச்சித் திட்டமானது அதன் ஆய்வுக் கட்டத்தைத் தாண்டி பரவலாக விரிவாக்கம் செய்யப்படுவதற்கு, கவனம் செலுத்தப்பட்ட ஒரு காலப்பகுதியாக இந்த காலப்பகுதியைக் குறிப்பிடலாம்.

தொண்டர் பணியாளர்கள் என்ற திட்டத்தின் கீழ் பயிற்சிகளைப் பெற்ற தொண்டர் பணியாளர்களது எண்ணிக்கையை 5 00ஆக உயர்த்துவதற்கான இலக்கை அடைவதற்கு போதுமான காலம் இல்லாமை, நிகழ்ச்சித்திட்டத்தின் உயிரோட்ட செயற்பாடுகளில் தரம் குன்றுவதற்கான காரணமாக அமைந்ததாக பிற்காலத்தில் மதிப்பீட்டாளர்களால் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் 1995வரை ஏற்பட்ட இந்த விரிவாக்கத்தை, இலங்கையில் கிராமிய அபிவிருத்திக்கான பயணத்தை வளமாக்குவதற்கு வழங்கப்பட்ட உயரிய பங்களிப்பாக நாம் பாராட்டுதல் வேண்டும்.

1992 ஆம் ஆண்டு தொடக்கம் மாற்று முகவர் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விரிவான சமூக தள அமைப்புக்களைக் கொண்ட கட்டமைப்பொன்றை உருவாக்கும் செயற்பாடு ஆரம்பமாகியது. சிறு உற்பத்தி குழுவானது அக்குழுக் கட்டமைப்பின் ஆரம்ப கட்ட அமைப்பாகக் காணப்பட்டதுடன் சிறு குழுக்கள் இணைந்து உருவாக்கப்படுகின்ற இரண்டாங்கட்ட அமைப்பானது கிராமிய மட்டத்திலான ஒரு அமைப்பாக, சிறு உற்பத்தி குழுவின் அபிவிருத்தி செயற்பாடுகளை நீண்ட காலத்திற்கு பேணிச் செல்வதற்கு துணையாயிருந்தமைக்கு உதாரணம், இம்மாற்று முகவர் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக இலகுவாக அறிய முடிகின்றது. அவ்வாறே இவ்விரண்டாந்தர அமைப்புக்கள் பிரதேச மட்டத்தில் மூன்றாங் கட்ட அமைப்புக்களாக உருமாறத் தொடங்கின. பாரம்பரிய கிராம தலைமைத்துவத்தை விஞ்சிய வகையில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களிடையே நேர்மறையான சிந்தனைகள் உருவாகத் தொடங்கின. பாரம்பரிய கிராம தலைமைத்துவத்தை விஞ்சிய வகையில் குறைந்த வருமானம் பெறும் மக்களிடையே நேர்மறையான எண்ணங்களை கட்டி எளுப்புவதர்க்கு இவ்வமைப்பு ரீதியான முறை பாரிய உறுதுணையாக அமைந்தது.

1995 தொடக்கம் 2001 வரையான காலப்பகுதியில் மாற்று முகவர் நிகழ்ச்சித் திட்டம் ஊடாக கட்டி எழுப்பப்பட்ட அமைப்பு ரீதியான கட்டமைப்பானது இன்னமும் விரிவாக்கம் அடைவதை காணக் கூடியதாக இருந்தது. சமூகத்தினரை அறிவுறுத்துதல் மற்றும் அனுபவங்கள் மூலம் பலமடைதல் மூலமாக, பரவலான அமைப்புக்கள் உருவாதல் இயல்பாக அமைந்தாலும், 1998 ஆம் ஆண்டளவில் சீடா நிறுவனத்தினால் வழங்கப்பட்ட நிதியுதவி முடிவடைவதற்கு இருந்தமையால் தொடர்ச்சியான அபிவிருத்தி செயன்முறைக்கு வலுவான அமைப்பு வலையப்பொன்றின் முக்கியத்துவம் யாது என்பது பயிற்றுவிப்பாளர்களுக்கு மட்டுமன்றி முகாமைத்துவத்தினருக்கும் விளங்கியது. இதனால் பயிற்றுவிப்பாளர்களும், ஆலோசகர்களும் திட்டத்தின் நிலைபேறை உறுதிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு மத்திய அமைப்பு / பிரதேச அமைப்புகளை கட்டி எழுப்புவதற்கு ஆர்வம்

காட்டினர். இந்த மூன்றாங்கட்ட அமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்ட இடங்களில் அவை அதிகாரப் பிரதேசங்களுக்கு அமைவாக கட்டி எழுப்பப்பட்டன.

சில பிரதேச அமைப்புக்கள் சிற்சில பிரதேச பிரிவுகளை உள்ளடக்குவதுடன் சில பிரதேச செயலகப் பிரிவுகள் இரண்டு அல்லது மூன்று அமைப்புகள் ஊடாக உள்ளடக்கப்படுகின்றன. அவ்வாறே சில பிரதேச அமைப்புக்கள் இரண்டு, மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட பிரதேச செயலக பிரிவுகளில் செயற்படுகின்றன. (உதா. ஹபராதுவ பங்கேற்றல் அமைப்பு, வெலிகம பிரஜாசக்தி அபிவிருத்தி நிதியம், ரம்பாவ பிரஜாசக்தி பங்கேற்றல் அபிவிருத்தி அமைப்பு, ரிதீகம ஆசிரி மனிதவள அபிவிருத்தி அமைப்பு) பல அமைப்புக்கள் பிரதேச செயலகப் பிரிவுகளில், பத்து, பதினைந்து அல்லது இருபது கிராம அலுவலர் பிரிவுகள் வரை உள்ளடக்கியுள்ளது. பதுளை மாவட்டத்தில் பிரஜாசக்தி அமைப்புக்கள் பிரஜாசக்தி வளைய அமைப்புக்களாக அறிமுகப்படுத்தப்பட்டன. இவ்வமைப்புக்களில், குறைந்த வருமானம் பெறும் அங்கத்தவர்கள் தமது உற்பத்திகள், விற்பனைகள், வாடிக்கையாளர் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு வினைத்திறனான செயற்பாடுகளை முன்னெடுப்பதுடன், அங்கத்தவர்களது நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற நுண் கடன் நிறுவனக் கட்டமைப்பாகவும் இவை செயற்படுகின்றன.

அதனடிப்படையில் 1996ஆம் ஆண்டிற்கு பின்னர் மாற்று முகவர் நிகழ்ச்சித்திட்டமானது இதுவரை அது பயணித்த பயணத்தில் வேறுபட்ட இயல்பைக் காட்டுவதற்கு ஆர்ரம்பித்தமைக்கு காரணம் அனைத்து அமைப்புக்களும் நுண்பாக நிதி நிறுவனக் காட்டமைப்புக்களாக உருமாறத் தொடங்கியமையே. அக்காலப்பகுதியில் சிறு அளவிலான நிதி செயற்பாடுகள் வறுமையை ஒழிக்கும் உபாயமாகப் பிரபலமடையத் தொடங்கின. அங்கத்துவ சேமிப்பு, பொது நிதியம், சிறு அளவிலான நிதி வசதிகளை வழங்கும் செயற்பாடுகள் தொடர்பான அனுபவங்கள், மாற்று முகவர் சிறு குழுக்களது செயற்பாட்டில் உருவாக்கப்பட்டன. அவ்வாறே தெற்காசிய நாடுகளில் காணப்பட்ட நுண்பாக நிதித் துறையின் அனுபவங்கள் தொடர்பாகவும் கவனம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 'ஜனசவிய' நிகழ்ச்சித்திட்டம் ஊடாக பெற்றுக் கொண்ட அனுபங்கள் ஊடாக, வங்கி முறை மூலம் வறிய மக்கள் நன்மைகளை அடைந்து கொள்ள படும் கஷ்டங்கள் எடுத்துக் காட்டப்பட்டன. இவ்விடயங்களானது வறிய மக்கள் விரும்புகின்ற சிறிய அளவிலான நிதி நிறுவனங்கள் உருவாகுவதற்கு காரணமாக அமைந்தது. 1998 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 57 பிரதேச மட்ட அமைப்புக்கள் (மத்திய அமைப்புகள்) உருவாகியிருந்தன. அவற்றுள் 697 கிராமிய மட்டத்திலான அமைப்புக்களும் 6918 சிறு குழுக்களும் உள்ளடங்கும்.

## பிரஜாசக்தி மகா சங்கம் உருவாதல்

மாற்று முகவர் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட பிரதேச மட்டத்திலான சமூக தள அமைப்புக்களை ஒருங்கிணைக்கும் உயர் மட்டத்திலான அமைப்பே பிரஜா சக்தி மகா சங்கமாகும். 1997 ஒகஸ்ட் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட இவ்வமைப்பின் அடிப்படை நோக்கம் பிரஜா சக்தி அமைப்புகளது கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கு தேவையான முகாமைத்துவ ரீதியான, நிறுவன ரீதியான, நிதி ரீதியான சக்திகளை அபிவிருத்தி செய்வதாகும். வளங்கள், அறிவு, அனுபவங்களை பகிர்தல், மாற்று முகவர் முறையை பிரபல்யப்படுத்துதல், அபிவிருத்தி திட்டங்களில் பங்கேற்றல், அபிவிருத்தி அணுகுமுறையை பயன்படுத்துதல் என்பன பிரஜாசக்தி மகா சங்கத்தின் ஏனைய நோக்கங்களாகும்.

சீடா சர்வதேச நிறுவனத்தின் நிதி அனுசரணை முடிவடைந்த சந்தர்ப்பத்தில் பிரஜாசக்தி மகா சங்கம் ஆரம்பிக்கப்பட்டமையானது கிராமிய அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் வழி காட்டலினாலும் சீடா நிறுவனத்தின் ஆசீர்வாதத்தினாளலுமாகும்.

பிரஜாசக்தி மகா சங்கத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக கடந்த 18 வருட காலப் பகுதியில் அடிப்படை நிகழ்ச்சித்திட்டங்கள் பல செயற்படுத்தப்பட்டன.

- நிறுவனத்தின் அபிவிருத்திக்கு உதவுதல்.
- பயிற்சிகளுக்கு உதவுதல்.
- சுழற்சி நிதி அபிவிருத்திக்கு உதவுதல்.
- மதிப்பீட்டு, வழிநடத்தல் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

என்பன அவற்றுள் பிரதான இடத்தைப் பிடித்தன. இந் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்காக கிராமிய அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஒத்துழைப்பு குறையற்று கிடைத்தமை இத்திட்டம் வெற்றியடைய மூல காரணமாக அமைந்தது.

**மாற்று முகவர் நிகழ்ச்சித்திட்டத்தின் தற்போதைய நிலைமைகள்**

| **2016 டிசம்பர் 31ஆந் திகதியில் பிரஜாசக்தி அமைப்புகளின் எண்ணிக்கை ரீதியான முன்னேற்றம்.** | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **மாவட்டம்** | **அமைப்பின் பெயர் மற்றும் முகவரி** | **பி.சே.பிரிவு** | **அங்கத்துவ குடும்பங்களின் எண்ணிக்கை** | **கிராமிய அமைப்புகளின் எண்ணிக்கை** | **சிறு குழுக்களின் எண்ணிக்கை** | **மொத்த நிதி** |
| குருநாகல் | திரிய பிரஜாசக்தி அபிவிருத்தி அமைப்பு, இப்பாகமுவ | இப்பாகமுவ, ரிதீகம | 583 | 11 | 64 | 7,993,750 |
| | ஆசிரி மாணவ அமைப்பு ரிதீகம | இப்பாகமுவ, ரிதீகம | 1538 | 32 | 242 | 78,075,462 |
| | ஜனநென பங்கேற்றல் அபிவிருத்தி அமைப்பு, வாரியபொல | பமுனாகொட்டுவ, வாரியபொல, வீரம்புகெதர | 636 | 9 | 58 | 1,928,766 |
| அநுராதபுரம் | பிரஜாசக்தி அபிவிருத்தி அமைப்பு, ரம்பாவ | ரம்பாவ | 683 | 37 | 88 | 5,395,208 |
| கண்டி | கம்பளை உடபலாத பிரஜாசக்தி அபிவிருத்தி அமைப்பு | கம்பளை, தொழுவ, கலஹா | 1250 | 10 | 48 | 8,000,000 |
| | பாதஹேவாஹெட பிரஜாசக்தி அபிவிருத்தி அமைப்பு | பாதஹேவாஹட | 1429 | 22 | 134 | 7,287,852 |
| களுத்துறை | சமகி சக்தி ஒருங்கிணைந்த அமைப்பு, அகலவத்த | அகலவத்த, பாலிந்தனுவர | 650 | 6 | 20 | 1,958,000 |
| காலி | பங்கேற்றல் அபிவிருத்தி அமைப்பு, நாகொட | நாகொட, பத்தேகம | 465 | 8 | 25 | 2,800,000 |
| | பங்கேற்றல் அபிவிருத்தி அமைப்பு, ஹிக்கடுவ | ஹிக்கடுவ | 1368 | 25 | 109 | 6,373,975 |
| | பிரஜாசக்தி அபிவிருத்தி அமைப்பு, யக்கலமுல்ல | யக்கலமுல்ல, பத்தேகம | 1081 | 8 | 53 | 7,313,920 |
| | பிரஜாசக்தி அபிவிருத்தி | அம்பலாங்கொட | 750 | 7 | 70 | 19,887,50 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | அமைப்பு, பட்டபொல | | | | | 0 |
| | பங்கேற்றல் அபிவிருத்தி அமைப்பு, ஹபராதுவ | ஹபராதுவ, இமதுவ, அக்மீமன, வெலிகம, வெலிபிடிய | 13892 | 121 | 632 | 85,582,36<br>5 |
| | ஸ்வசக்தி அபிவிருத்தி அமைப்பு, கின்தொட | காலி பட்டினமும் சூழலும் | 837 | 10 | 1070 | 6,691,158 |
| மாத்தறை | பிரஜாசக்தி அபிவிருத்தி நிதியம், வெலிகம | வெலிபிடிய, மாத்தறை, அக்குரஸ்ஸ, மாலிம்பட | 3092 | 94 | 381 | 50,040,20<br>0 |
| | பிரஜாசக்தி நிலையம், கம்புருகமுவ | வெலிகம | 250 | - | - | 825,000 |
| பதுளை | பிரஜாசக்தி வலய அமைப்பு, ஹாலி எல | ஹாலி எல | 767 | 2 | 64 | 1,024,440 |
| | பிரஜாசக்தி வலய அமைப்பு, மலித்த | ஹாலி எல | 1283 | 6 | 183 | 3,087,031 |
| | பிரஜாசக்தி வலய அமைப்பு, ஊவா பரணகம | ஊவா பரணகம | 485 | 4 | 56 | 3,325,000 |
| | பிரஜாசக்தி வலய அமைப்பு, வலஹாமுல்ல | ஊவா பரணகம | 415 | 4 | 100 | 5,062,183 |
| | பிரஜாசக்தி வலய அமைப்பு, ரிதீமாலியத்த | ரிதீமாலியத்த | 1584 | 21 | 335 | 1,050,000 |
| | பிரஜாசக்தி வலய அமைப்பு குருவிதென்ன | ரிதீமாலியத்த | 2491 | 4 | 126 | 10,587,48<br>4 |
| | பிரஜாசக்தி வலய அமைப்பு, ஊவா திஸ்ஸபுற | ரிதீமாலியத்த | 440 | 4 | | 1,011,576 |
| | பிரஜாசக்தி வலய அமைப்பு, மீகஹாகிவுல | மீகஹாகிவுல | 394 | - | 70 | 481,861 |
| | பிரஜாசக்தி வலய அமைப்பு, ரில்போல | ஹாலி எல | 682 | 8 | 62 | 3,419,724 |
| | பிரஜாசக்தி வலய அமைப்பு, குட்டியகொல்ல | சொரனாதொட | 525 | 3 | 96 | 2,296,868 |
| | பிரஜாசக்தி வலய அமைப்பு, எல்ல | எல்ல | 545 | 5 | 48 | 4,658,614 |
| | பிரஜாசக்தி வலய அமைப்பு, புசலாவை | புசலாவை | 765 | 5 | 48 | 1,260,000 |

மாற்று முகவர் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கட்டி எழுப்பப்பட்ட பிரஜாசக்தி சமூக அடிப்படை அமைப்புகள் அனைத்தும் 1980 ஆம் ஆண்டு 31 ஆம் இலக்க தொண்டர் சமூக சேவைகள் அமைப்புகள் (பதிவு செய்யும் மற்றும் மேற்பார்வை செய்யும்) சட்டத்தின் கீழ் சமூக சேவைகள் அமைப்பாக அல்லது அரச சார்பற்ற அமைப்பாக பதிவு செய்யும் தேசிய செயலகத்தின் பதிவினைப் பெற்றுள்ளது.

திட்டத்தின் ஒட்டுமொத்த நோக்கமான வறுமையை ஒழித்தலுக்கு ஸ்வசக்தி மற்றும் பங்களிப்பை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தி செயற்பாடோன்றை கட்டி எழுப்பும் நோக்கில் இலக்கு சமூகத்தை வலுப்படுத்துவதற்காக பிரஜா சக்தி அமைப்புக்களால் தற்போதுவரை பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வறியவர்களை வலுப்படுத்த வேண்டும் எனின் அவர்கள் முகங்கொடுக்கின்ற சமூக, பொருளாதார யதார்த்தங்கள் தொடர்பாக ஆழமாக அறிந்து கொள்ளுதல் கட்டாயமானதாகும். மாற்று முகவர் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் கவனம் செலுத்தப்படுகின்ற ஒருமைப்பாடு, ஒருவரை ஒருவர் மதித்தல், தலைமைத்துவத்திற்கு பழக்குதல், அநியாயத்திற்கு எதிராக எழுந்திருத்தல், உரிமைகளுக்கு முன்னிற்றல் மற்றும் அவற்றைப் பெற்றுக் கொள்ளுதல், ஒருவர் ஒருவரது முன்னேற்றத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுதல், அபிமானம், மதிப்பு, சமூக நிலைமைகள் என்பவற்றில் சிறந்த மாற்றங்களை ஏற்படுத்துதல் போன்ற குணாதிசயங்களானது, பிரஜா சக்தி அமைப்பு பெற்றுக்கொண்ட சமூக ரீதியான மாற்றங்களைடையே பிரதான இடத்தைப் பெறுகின்றன. சேமிப்பு விருத்திக்கு புதிய வளங்களை ஈடுபடுத்தி, முதலீட்டு மற்றும் வருமான அதிகரிப்பதற்கான கருத்திட்டங்களை ஆரம்பித்தல் மற்றும் அவற்றை பேணிச் செல்லுதல், உற்பத்திகள், சந்தை மற்றும் விற்பனை நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல், புதிய தொழிநுட்பங்களை பொருத்தப்படுடையதாக்குதல், சுகாதார மற்றும் கல்வித் திட்டங்களை அறிமுகப்படுத்தி, அங்கத்தவர்களிடையே பொருளாதார பழக்கத்தின் மாற்றங்கள் ஊடாக வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் என்பன பின்பற்றப்படுகின்ற செயற்பாடுகளிடையே பிரதானமாகும். இங்கு அங்கத்துவ அமைப்புகளால் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ள, ‘சமூகத்தினரை அடிப்படையாகக் கொண்ட நிதி செயற்பாடுகள்’ பிரதான இடத்தைப் பெறுகின்றன. வர்த்தக வங்கிகளால் புறம்பான நிதி செயற்பாடுகளின் அவசியம் அறியப்பட்டு இச்செயற்பாடுகளை முறையாக பேணிச் செல்லும் இயலுமையயும் பாராட்ட முடியும். இவ்வமைப்புக்கள் அனைத்தும் 2016 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நுண்பாக நிதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. பிரஜாசக்தி அமைப்புக்களது முக்கியமான காரணியாக அமைந்துள்ள இந்த நிதி அமைப்புக்களது எதிர்கால நிலைபேற்றைப் பேணுவதற்கு அவற்றை முறைமைப்படுத்த வேண்டியுள்ளது.

செயற்பாடு ரீதியான ஆராய்ச்சி முறைமை ஊடாக கட்டி எழுப்பப்பட்ட மாற்று முகவர் நிகழ்ச்சித்திட்டமானது, சமகாலத்தில் முறையான நிறுவனக் கட்டமைப்பாக உருமாறியுள்ளது. நிதி வழங்கும் நிறுவனங்களால் வழங்கப்பட்ட நிதி முடிவடைந்ததன் பின்னர், அவ்வமைப்புக்கள் தமது சுய நிதியில் சொந்த பயணத்தை ஆரம்பித்துள்ளன. இந்த அனைத்து அமைப்புக்களும் முழுமையாக சிறந்த மட்டத்தை அடைந்துள்ளன. சில அமைப்புக்கள் மிகவும் சக்திவாய்ந்த அமைப்புக்களாகக் காணப்படுவதுடன், சில அமைப்புக்கள் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றன. மிக சக்திவாய்ந்த அமைப்புக்கள் சில, மாற்று முகவர் நிகழ்ச்சித்திட்டத்தின் ஆய்வு கூடமாக அறிமுகப்படுத்துமளவுக்கு பெறுமதியான அமைப்புக்களாக செயற்படுகின்றமை, கிராமிய அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆராய்ச்சி அமைப்பிற்கும், இத்திட்டத்திற்கும் கிடைத்த சிறந்த கௌரவமாகும். ஒன்றிற்கொன்று சமமான நிலைமைகளைக் கொண்டிராவிட்டாலும் இவ்வனைத்து அமைப்புக்களும் மாற்று முகவர் நிகழ்ச்சித்திட்டத்தின் விரிவாக்கத்திற்கு அளித்துள்ள பங்களிப்பு அளப்பரியதாகும்.

## அபிவிருத்தித் துறையில் செலுத்திய தாக்கங்கள்

மாற்று முகவர் நிகழ்ச்சித்திட்ட ம் இலங்கையில் அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள் ஊடாக அபிவிருத்தி துறையில் செய்யப்பட்ட செயற்பாடுகளுக்கு குறிப்பிடத்தக்களவு தாக்கங்களை ஏற்படுத்திய நிகழ்ச்சித்திட்டமாகும். ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், ஜனசவிய நிகழ்ச்சித்திட்டம், தேசிய அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பு நிதியம், இலங்கை மத்திய வங்கியின் 'இசுறு' போன்ற நிகழ்ச்சிகள் மற்றும் சமுர்த்தி திட்டங்களில் ' மாற்று முகவர் நிகழ்ச்சித்திட்டத்தின்' தாக்கங்களைக் காண முடியும். மாற்று முகவர் நிகழ்ச்சித்திட்டத்தி னைப் போன்றே மேற்கூறப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களது பெறுபேறாக, சிறு குழுக்களை அடிப்படையாகக் கொண்ட கிராமிய அமைப்புக்கள், கிராமிய நிதி நிறுவனங்கள், ஒருங்கிணைந்த அமைப்புக்கள் போன்ற பல நிறுவனங்கள் கிராமிய சமூகத்தினரிடையே உருவாகியுள்ளன. பாரிய எண்ணிக்கையிலான அரச சார்பற்ற நிறுவனங்கள், மாற்று முகவர் முறை ஊடாக பல்லாயிரக்கணக்கான அபிவிருத்தி செயற்பாட்டாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளார்கள். இவ்வனைத்து திட்டங்களினதும் செயற்பாடுகள் ஊடாக மாற்று முகவர் நிகழ்ச்சித்திட்ட ம், அதாவது பங்கேற்றல் அபிவிருத்தி முறையானது அங்கீகாரத்திற்கு உட்பட்டுள்ளது. சர்வதேச நிறுவனங்கள் பலவற்றினாலும் வறுமை ஒழிப்பிற்காக ஈடுபடுத்த வேண்டிய பிரதான முறையாக பங்கேற்றல் அபிவிருத்தி முறை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. நிலைமைகள் அவ்வாறிருந்தாலும் மாற்று முகவர் நிகழ்ச்சித்திட்டம் அல்லது அதன் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட பங்கேற்றல் அபிவிருத்தி முறையானது பல சவால்களை எதிர்கொண்டுள்ளது. நாட்டில் கிராமிய அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கையொன்று காணப்படாமை, பங்கேற்றல் அபிவிருத்தி முறை தொடர்பாக தேசிய ரீதியில் இணக்கப்பாடொன்று கட்டி எழுப்பப்படாமை, நிபுணர்களது குறைபாடு, மாற்று முகவர் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக கட்டி எழுப்பப்பட்ட முறையை வளப்படுத்தி, வலுப்படுத்தி முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான அரச அனுசரணைகள் காணப்படாமை, என்பன அச்சவால்களுள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இதற்கான முதலாவது தீர்வு, தேசிய நிகழ்ச்சித்திட்டமொன்றின் தேவைப்பாடாகும். நாட்டின் தலைமைத்துவத்தின் வழிகாட்டலின் கீழ் அமைந்த தேசிய முன்னெடுப்புகள் மூலம், வறுமை ஒழிக்கப்பட்ட சமூகமொன்றை உருவாக்கும் புதிய பாதை உருவாகும்.